உ

கணபதிதுணை.

திருப்புல்வயல்

குருபாததாசர் அருளிச்செய்த

குமரேசசதகம்.

இஃது,

சாத்தான்குளம் ம-ா-ா-ஸ்ரீ,

க-மீ-மு-முகம்மது அசன் அவர்கள்

கேட்டுக்கொண்டபடி,

திருமயிலை-வித்வான்

சண்முகம்பிள்ளையவர்கள் மாணாக்கர்

ம-இராமலிங்கமுதலியாரால்

சுத்தப்பிரதியாகப் பரிசோதிக்கலுற்று,

சிட்டத்தூர்,

செங்கல்வராயமுதலியாரது

சென்னை:

சிற்றம்பலவிலாசம் பிரெஸ்ஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

1900.

(இதன் விலை அணா—௩.)

உ

கணபதிதுணை.

குமரேசசதகம்.

காப்பு-வெண்பா.

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமே வியசதகஞ் செப்பவே—கோமேவிக்
காக்குஞ் சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

அவையடக்கம்.

ஆசிரிய விருத்தம்.

மாரிக்கு நிகரொன்று பனிசொரிதல் போலவு மனைக்குநிகரொன்று சிறுபெண், மணல் வீடுகட்டுவது போலவுஞ் சூரியன்முன் மருவு மின் மினிபோ லவும், பாருக்குள் நல்லோர் முனேபித்தர் பலமொழி பகர்ந்திடுஞ் செயல் போ லவும், பச்சைமயி லாடுதற் கிணையென்று வான்கோழி பாரிலா டுதல்போ லவும், பூரிக்கு மினியகா வேரிக்கு நிகரொன்று போது வாய்க் கால்போ லவும், புகல்சிப்பி முத்துக்கு நிகராப் பளிங்கைப் பொருந்தவைத் ததுபோ லவும், வாரிக்கு முன்வாவி பெருகல்போ லவு மின்சொல் வாணர்முனு கந்து புல்லை, வால குமரேசர்மேற் சதகம் புகன்றனன் மனம் பொறுத் தருள்பு ரிகவே.

குமரேசர் மகிமை.

பூமிக்கொ ராறுதலை யாய்வந்து சரவண ப்பொய்கைதனில் விளையா டியும், புனிதற்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும் போதனை ச்சிறையில் வைத்தும், தேமிக்க வரிகரப் பிர மாதி கட்குஞ்செயிக்கமுடி யாவ சுரனைத், தே கங்கிழித்துவடி வேலினா லிருகூறு செய்தமரா ர்சிறைத விர்த்தும், நேமிக்கு ளன்பரிட ருற்றசம யந்தனில் நினைக்குமுன் வந்து தவியும், நிதமுமெய்த் துணையாய் விளங்கலா லுலகி லுன்னை நிகரான தெய்வ முண்டோ, மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி மார்பனே வள்ளி கணவா, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (க)

அந்தண ரியல்பு.

குறையாத காயத்ரி யாதிஜெப மகிமை யுங் கூறுசுரு திப்பெருமையுங், கோதிலா வாகம புராணத்தின் வளமையுங் குலவுயா காதி பலவும், முறையாய் நடத்தலாற் சகலதீ வினைகளையு முளரிபோ லேதகிப்பார், முதன்மை பெறு சிலைசெம்பு பிருதுவிக ளிற்றெய்வ மூர்த்தமுண் டாக்குவிப்பார், நிறையாக நீதிநெறி வழுவார்க ளாகையா னீண்மழை பொழிந்திடுவதும், நிலமது செழிப்பதும் அரசர்செங் கோல்புரியு நிலையுமா தவர்செய் தவமும்,

மறையோர்களாலே விளங்குமிவ் வுலகத்தின் மானுடத் தெய்வமிவர்காண், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (உ)

அரசரியல்பு.

குடிபடையி லபிமான மந்திரா லோசனை குறிப்பறிதல் சத்ய வசனங், கொடைநித்த மவரவர்க் கேற்றமரி யாதைபொறை கோடாத சதுரு பாயம், படிவிசா ரணையொடு ப்ரதானிதள கர்த்தரைப் பண்பறிந் தேயமைத்தல், பல்லுயிரொ லாந்தன் னுயிர்க்குநிக ரென்றே பரித்தல்குற் றங்கள் களைதல், துடிபெறு தனக்குறுதி யானநட் பகமின்மை சுகுணமொடு கல்வி யறிவு, தோலாத காலமிட மறிதல்வினை வலிகண்டு துஷ்ட நிக் ரகசௌரியம், வடிவுபெறு செங்கோ னடத்திவரு மரசர்க்கு வழுவாத முறைமை யிதுகாண், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (ஈ)

வணிகரியல்பு.

கொண்டபடி போலும்விலை பேசிலா பஞ் சிறிது கூடிவர நயமுரைப்பார், கொள்ளு மொரு முதலுக்கு மோசம்வ ராதபடி குறுகவே செலவு செய்வார், வண்டப் புரட்டர்தா முறிதந்து பொன்னடகு வைக்கினுங் கடனீ

ந் திடார், மருவுநா ணயமுளோர் கேட்டனு
ப் புகினுமவர் வார்த்தையிலெ லாங்கொ டுப்
பார், கண்டெழுது பற்றுவர வினின்மயிர்
பிளந்தே கணக்கிலணு வாகி லும்விடார், கா
சுவீ ணிற்செலவி டாருசித மானதிற் கனதிர
வி யங்கள் விடுவார், மண்டலத் தூடுகன வர்
த்தகஞ் செய்கின்ற வணிகர்க்கு முறைமையி
துகாண், மயிலே விளையாடு குகனேபுல் வய
னீடு மலைமேவு குமரே சனே. (சா)

வேளாள ரியல்பு.

நல்லதே வாலயம் பூசனை நடப்பதும்
நாடோறு மழைபொ ழிவதும், நாடிய தபோ
தனர்கண் மாதவம் புரிவதும் நவில்வேத வே
தி யரொலாம், சொல்லரிய யாகாதி கருமங்கள்
செய்வதுந் தொல்புவி செழிக்கு நலமுஞ், சுப
சோப னங்களுங் கொற்றவர்கள் செங்கோல்
துலங்குமனு நெறி முறைமையும், வெல்லரிய
சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும் விற்
பனையு மதிக புகழும், மிக்கவதி காரமுந் தொ
ழிலாளர் சீவனமும் வீரரண சூரர் வலியும், வ
ல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினுன் விளைவ வன்றோ, மயிலேறி வி
ளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு கும
ரே சனே. (ரு)

பிதாக்கள்.

தவமதுசெய் தேபெற் றெடுத்தவன் முதற்பிதா தனைவளர்த் தவனொ ருபிதா, தயையாகவித்தையைச் சாற்றினவ னொருபிதா சார்ந்தசற் குருவொ ருபிதா, அவமறுத் தாள்கின்ற வரசொ ருபிதாநல்ல வாபத்து வேளை தன்னில், அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதாவன்புள முனோனொருபிதா, கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா கலிதவிர்த் தவனொருபிதா, காசினியி லிவரை நித் தம்பிதா வென்றுளங் கருதுவது நீதியாகும், மவுலிதனின் மதியரவு புனைவிமலருதவுசிறு மதலையென வருகு ருபரா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. (சா)

ஒன்றையொன்று பற்றியிருப்பன.

சத்தியந் தவறு திருப்பவ ரிடத்தினிற் சார்ந்துதிரு மாதி ருக்குஞ், சந்ததந் திருமாதிருக்குமவி டந்தனிற் றனதுபாக் கியமி ருக்கும், மெய்த்துவரு பாக்கிய மிருக்குமவி டந்தனில் விண்டுவின் கிளையி ருக்கும், விண்டுவின் கிளைபூண் டிருக்குமவி டந்தனின் மிக்கான தயையி ருக்கும்,பத்தியுடனினியதயை யுள்ளவ ரிடந்தனிற் பகர்தரும மிகவி ருக்கும், பகர்தரும முள்ளவ ரிடந்தனிற் சத்துரு பலா

யனத் திறலிருக்கும், வைத்திசை மிகுந்ததிற லுள்ளவ ரிடத்தில்வெகு மன்னுயிர் சிறக்கு மன்றோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (எ)

இவர்க்கிவர் தெய்வமெனல்.

ஆதுலர்க் கன்னங் கொடுத்தவர்க ளே தெய்வ மன்பான மாணுக் கருக், கரியகுருவே தெய்வ மஞ்சினோர்க் காபத் தகற்றினோ னே தெய் வமாம்,காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாங் கணவனே மிக்க தெய்வங், காசினியின் மன் னுயிர் தமக்கெலாங் குடிமரபு காக்குமன் னவர்தெய் வமாம், ஓதரிய பிள்ளைகட் கன்னைதந் தையர்தெய்வ முயர்ஜாதி மாந்தர் யார்க்கும், உறவின்முறை யார்தெய்வம் விசுவாச முள்ளபேர்க் குற்றசிவ பத்தர் தெய்வம், மாதயையி னுற்சூத் திரர்க்குமறை யோர்தெய் வம் வானவர்க் குத்தெய் வம்நீ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (அ)

இவர்க்கிது நினைவெனல்.

ஞானநெறி யாளர்க்கு மோக்ஷத்தி லே நினைவு நல்லறிவு ளோர்தமக்கு, நாடொறுந் தருமத்தி லேநினைவு மன்னர்க்கு ராச்சியந் தன்னில் நினைவு, ஆனகா முகருக்கு மாதர்மே லேநினைவு அஞ்சாத திருட ருக்கிங், களுதி

ணங் களவிலே நினைவுதன வணிகருக் காதா ய மீது நினைவு, தானமிகு குடியாள ருக்கெ லாம் வேளாண்மை தனினினைவு கற்ப வர்க் குத், தருகல்வி மேனினைவு வேசியர்க் கினிய பொருடருவோர்கண் மீது நினைவு, மானபர னுக்குமரி யாதைமே னினைவெற்கு மாருது ன்மீது நினைவு, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரே சனே. (கூ)

இவர்க்கிது வில்லையெனல்.

வேசைக்கு நிசமில்லை திருடனுக் குற வில்லை வேந்தற்கு நன்றி யில்லை, மிடியற்கு விலைமாதர் மீதுவங் கணமிலை மிலேச்சற்கு நிறைய தில்லை, ஆசைக்கு வெட்கமிலை ஞா னியா னவனுக்குளகமில்லை மூர்க்கன் றனக், கன்பில்லை காமிக்கு முறையில்லை குணமி லோர்க் கழகில்லை சித்த சுத்தன், பூசைக்கு ந விலங்க சுத்தியிலை யாவுமுணர் புலவனுக் க யலோ ரிலை, புல்ல னுக்கென்று முசி தானுசித மில்லைவரு புலையற் கிரக்க மில்லை.மாசைத் த விர்ந்தமதி முகதெய்வ யானையொடு வள்ளிக் கிசைந்த வழகா, மயிலேறி விளையாடு குக னேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. ()

இப்படிப்பட்டவ ரிவரெனல்.

நியாயநெறி தவருமலுலகபரி பாலன நடத்துமவனேயரசனும், ராஜயோ சனைதெ

ரிந் துறுதியா கியசெய்தி நவிலுமவ னேமந்திரி, நேயமுட னேதன் சரீரத்தை யெண்ணு த நிர்வாகி யேசூ ரனும், நிலைபெறு மிலக்கண மிலக்கிய மறிந்துசொலு நிபுணகவி யேகவிஞனும், ஆயதொரு வாகடந் தாதுவினிதானமு மறியுமுதி யோன் வைத்யன், அகமின்றி மெய்யுணர்ந் தைம்புல னெழித்துவிட்டவனேமெய்ஞ் ஞானி யெனலாம்,மாயவர் சகோதரி மனோன்மணிக் கன்பான வரபுத்ர வடிவே லவா, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரே சனே. (௰௧)

விரைந்தடக்கத்தகுவன விவையெனல்.

அக்கினியை வாய்முந்து துர்ச்சனரை வஞ்சமனை யாளைவளர் பயிர்கொள் கலையை, அஞ்சா விரோதிகளை யனியாய முடையோரை யகிர்த்தியப் பெண்களார்ப்பைக், கைக்கினிய தொழிலாளி யைக்கொண்ட வடிமையைக் களவுசெய் யுந்திருடரைக், கருதிய விசாரத்தை யடக்கமில் பலிசையைக் கடிதான கோபந் தனை, மெய்க்கினித லாப்பிணியை யவையுதா சீனத்தை வினைமூண் டிடுஞ்சண்டையை, விஷமேறு கோரத்தை யன்றடக்குவதலான் மிஞ்சவிட லாகா துகாண், மைக்கினிய கண்ணி நற வள்ளிதெய் வானையை மணஞ்செய்த பேர ழகனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே.

இவர்க்கிது துரும்பெனல்.

தாராள மாகக் கொடுக்குந் தியாகிக டமக்குநற் பொருள்து ரும்பு, தன்னுயிரை யெண்ணாத சூரனுக் கெதிராளி தளமெலா மொருதுரும்பு, பேரான பெரியருக் கற்பரது கையினிற் பிரயோஜனந்து ரும்பு, பெரிதான மோக்ஷசிந் தனையுள்ள வர்க்கெலாம் பெண் போகமொருது ரும்பு, தீராத சகலமும் வெறுத்ததுற விக்குவிறல் சேர்வேந்த னொருது ரும்பு, செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாஞ் செந்தமிழ்க் கவிது ரும்பாம், வாராரு மணிகொண்முலை வள்ளிதெய் வானையை மணம்புணரும் வடிவே லவா, மயிலேறி விளையாடு குகனெபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. (௰௩)

இதனை விளக்குவ திதுவெனல்.

பகல்விளக் குவதிரவி நிசிவிளக் குவதுமதி பார்விளக் குவதுமேகம், பதிவிளக்குவதுபெண் குடிவிளக் குவதரசு பரிவிளக் குவதுமேகம், இகல்விளக் குவதுவலி நிறைவிளக் குவதுநல மிசைவிளக் குவதுசுதியூ, ரிடம்விளக்குவதுகுடி யுடல்விளக்குவதுண்டியினியசொல் விளக்கு வதருள், புகல்விளக் குவதுகொடை தவம்விளக்குவதறிவு பூவிளக்குவதுவாசம், பொருள்விளக் குவதுதிரு முக

ம்விளக் குவதுநகை புத்தியை விளக்குவது நூல், மகம்விளக் குவது மறைசொல்விளக் குவதுநிசம் வாவியை விளக்கு வதுநீர், மயி லேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரே சனே (௰௪)

பிறப்பிட நன்மையால் நன்மைபெறமை.

சிங்கார வனமதி லுதிப்பினுங் காகமது இஞ்சொல்புகல் குயிலா குமோ, திரையெறியு ம் வாவியிற் பூத்தாலு மேகொட்டி செங்கஞ்ச மலரா குமோ, அங்கான கத்திற் பிறந்தாலு முயலான தானையின் கன்றா குமோ, ஆண் மையா கியநல்ல குடியிற் பிறந்தாலு மசடர் பெரி யோரா வரோ, சங்காடு பாற்கடல் பிறந் தாலு நத்தைதான் சாளக்கி ராமமா மோ, தட மேவு கடனீரி லேயுப்பு விளையினுஞ் சாரச ர்க் கரையா குமோ, மங்காத செந்தமிழ்க் குறு முனிக் குபதேசம் வைத்தமெய்ஞ் ஞானகுரு வே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீ டு மலைமேவு குமரே சனே. (௰௫)

பலர்க்கும் பயன்படுவன.

கொண்டல்பொழி மாரியு முதாரசற் கு ண முடைய கோவுமூ ருணியி னீரும், கூட்ட மிடு மம்பலத் துறுதருவி னீழலுங் குடியா ளர் விவசா யமும், கண்டவர்களெல்லாம் வ ரும்பெருஞ் சந்தியிற் கனிபல பழுத்த மாமு

ம், கருணையுட னேவைத் திடுதணீர்ப் பந்த லுங் காவேரி போலூற் றமும், விண்டலத் துறைசந்தி ராதித்த கிரணமும் வீசுமா ருதசீ தமும், விவேகியெனு நல்லோ ரிடத்திலுறு செல்வமும் வெகுஜனர்க் குபகா ரமாம், வண் டிமிர் கடப்பமலர் மாலையணி செங்களப மார் பனே வடிவே லவா, மயிலேறி விளையாடு கு கனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே.

தாமழியினுங் குண மழியாதவை.

தங்கமா னதுதழலி னின்றுருகி மறுகி னுந் தன்னொளி மழுங்கி டாது, சந்தனக் கு றடுதான் மெலிந்துதேய்ந் தாலுமோ தன்ம ணங் குன்றி டாது, பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமோ பொலிவெண்மை கு றைவு றாது, போதவே காய்ந்துநற் பாலகு றுகி னாலும் பொருந்துசுவை போய்வி டா து, துங்கமணி சாணையிற் றேய்ந்துவிட் டா லுந் துலங்குகுண மொளியா துபின், தொன் மைதரு பெரியோர் மடிந்தாலு மவர்களது தூயநிறை தவறு குமோ, மங்களகல் யாணி குற மங்கைசுர குஞ்சரியை மருவுதிண் புய வா சனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. (௰எ)

நரகில் வீழ்வோர்.

மன்னரைச் சமரில்விட் டோடினவர் கு ருமொழி மறந்தவர் கொலைபா தகர், மாதா பி தாவைநிந் தித்தவர்கள் பரதார மருவித் திரி

ந்த பேர்கள், அன்னங் கொடுத்தபே ருக்கழி வை யெண்ணினோ ரரசடக் கியவ மைச்சர், ஆலய மிகழ்ந்தவர்கள் விசுவாச காதக ரருந் தவர் தமைப் பழித்தோர், முன் னுதவி யாய்ச் செய்த நன்றியை மறந்தவர் முகஸ்துதி வழ க்கு ரைப்போர், முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினந்தவர்கண் முழுதும்பொய் யுரைசொல் லுவோர், மற்றொருவர் வைத்தபொரு ளபக ரித் தோரிவர்கண் மாநரகில் வீழ்வ ரன்றோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு ம லைமேவு குமரே சனே. (௧௮)

சரீரசுகம்.

மாதத் திரண்டுவிசை மாதரைப் புல்குவ து மறுவரு விரோச னந்தான், வருஷத் தி ரண்டுவிசை தைலந் தலைக்கிடுதல் வாரத் தி ரண்டு விசையாம், மூதறிவி னுடனது வ யதினுக் கிளையவொரு மொய்குழ லுடன்சை யோகம், முற்றுதயிர் காச்சுபால் நீர்மோ ருரு க்குநெய் முதிரா வழுக்கை யிளநீர், சாதத்தி லெவளவா னாலும் புசித்தபின் முகந் தனக்கு வாங்கல், தயையாக வுண்ட பி னுலாவலிவை மேலவர் சரீரசுக மாமென் பர்காண், மாதவ குமாரிசா ரங்கத் துதித்தகுற வள்ளிக்கு கந்த சரசா, மயிலேறி விளையாடு குகனேபுல் வய னீடு மலைமேவு குமரே சனே. (௧௯)

யார்க்கு மனுபவம் விடாமை.

தேசுபெறு மேருபிர தக்ஷணஞ் செய்து மதி தேகவடு நீங்க வில்லை, திருமா லுறங்கி

டுஞ் சேடனுக் குவணன் செறும்பகை யொழிந்த தில்லை, ஈசன் கழுத்திலுறு பாம்பினுக் கினாவே றிலாமலே வாயு வாகும், இனியகண் ணுகிவரு பரிதியா னவனுக் கிராகுவோ கண விரோதி, ஆசிலாப் பெரியோ ரிடத்தினி லடுக்கினு மமைத்தபடி யன்றி வருமோ, அவரவர்க ளனுபோக மனுபவித் திடல்வேண்டு மல்லால் வெறுப்ப தெவனோ, வாசவனு மும்பரனை வரும்விஜய ஜயவென்று வந்து தொழுதேத்து சரணு, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. ()

இதுவின்றி யிது சிறவாதெனல்.

குருவிலா வித்தைகூ றறிவிலா வாணிபங் குணமிலா மனைவி யாசை, குடிநல மிலா நாடு நீதியில் லாவரசு குஞ்சர மிலாத வெம்போர், திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவந் தியானமில் லாத நிட்டை, தீபமில் லாதமனை சோதர மிலாத வுடல் சேகர மிலாத சென்னி, உருவிலா மெய்வளமை பசியிலா வுண்டிபுக ழுண்மையில் லாத வசனம், யோசனை யிலாமந்த்ரி தைரிய மிலாவீர முதவியில் லாத நட்பு, மருவிலா வண்ணமலர் பெரியோ ரிலாதசபை வையத் திருந்தென் பயன், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடுமலைமேவு குமரேசனே. (௨௧)

பகைக்கப்படாதவ ரிவரெனல்.

அரசர்பகை யுந்தவம் புரிதபோ தனர்பகையு மரியகரு ணீகர் பகையும், அடுத்துக்

கெடுப்போர் கொடும்பகையு மூட்பகையு மருவிலாக் கொலைஞர் பகையும், விரகுமிகு மூரிலுள் ளோருடன் பகையுமிகு விகடப்பிரசங்கி பகையும், வெகுஜனப் பகையுமந் திரவாதி யின்பகையும் விழைமருத் துவர்கள் பகையும், உரமருவு கவிவாணர் பகையுமாசான்பகையு முறவின்முறை யார்கள் பகையும், உற்றதிர வியமுள்ளார் பகையுமந் திரிபகையு மொருசிறிது மாகா தாகாண், வரநதியின் மதலையென வினியசர வணமிசையில் வருதருண சிறுகுழவியே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௨௨)

பேயெனப் படுவோ ரிவரெனல்.

கடனுதவு பேர்வந்து கேட்கும்வே ளையின்முகங் கடுகடுக் கின்ற பேயும், கனமருவு பெரியதனம் வந்தவுட னிறுமாந்து கண்விழிக்காத பேயும், அடைவுடன் சத்துருவின் பேச்சைவிசு வாசித் தகப்பட் டுழன்ற பேயும், ஆசைமனை யாளுக்கு நேசமா யுண்மைமொழி யானதை யுரைத்த பேயும், இடரிலா நல்லோர்கள் பெரியோர்களைச்சற்று மெண்ணாதுரைத்த பேயும், இனியபரி தானத்தி லாசைகொண் டொருவர்க் கிடுக்கண்செய் திட்ட பேயும், படமனை யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும் வசைபெற்ற பேய்களன்றோ, மயி

லேறி விளையாடு குகனேபுல் வயனிடு மலை
மேவு குமரே சனே. (உ௩)

அவ்வவ் வினத்தி லுயர்ந்தவை.

தாருவிற் சந்தன நதியினிற் கங்கைவிர
தத்தினிற் சோம வாரம், தகைபெறு நிலத்தி
னிற் காஷ்மீர கண்டந் தலத்திற் சிதம்ப ரத
லம், சீருலவு ரிஷிகளில் வசிட்டர்பசு விற்
காம தேனுமுனி வரில்நா ரதன், செல்வநவ
மணிகளிற் றிகழ்பதும ராகமணி தேமலரி
லம்போ ருகம், பெருலவு கற்பினி லருந்ததி
கதித்திடு பெலத்தின்மா ருதம்யா னையிற்,
பேசிலை ராவதந் தமிழினி லகத்தியம் பிரண
வம் மந்தி ரத்தில், வாரிதியி லேதிருப் பாற்க
டல் குவட்டினின் மகாமேரு வாகு மன்றோ,
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனிடு ம
லைமேவு குமரே சனே. (உ௪)

அவரவர்க்குப் பெலமாவன.

அந்தணர்க் குயர்வேத மேபெலங் கொ
ற்றவர்க் கரியசௌ ரியமேபெலம், ஆனவணி
கர்க்குநிதி யேபெலஞ் சூத்திரர்க் காயினே
ருழவே பெலம், மந்திரிக்குச்சது ருபாயமே
பெலநீதி மானுக்கு நடுவே பெலம், மாதவர்
க் குத்தபசு பெலமட வியர்க்குநிறை மானமி
கு கற்பே பெலம், தந்திர மிகுத்தகன சேவ
கர் தமக்கெலாஞ் சாமிகா ரியமே பெலம், சா
ன்றவர்க் குப்பொறுமை யேபெலம் புலவோ

ர் தமக்குநிறை கல்வி பெலமாம், வந்தனைசெ
யும்பூசை செய்பவர்க் கன்பு பெலம் வாலவடி
வானவேலா, மயிலேறி விளையாடு குகனே
புல் வயனீடு மலைமேவு குமரே சனே.(உரு)

இருந்தும் பயன் படாதவை.

தருணத்தி லுதவிசெய் யாதநட் பாளர்
பின் றந்தென தராமலென்ன, தராதர மறிந்
துமுறை செய்யாத மன்னரைச் சார்ந்தென்
ன நீங்கி லென்ன, பெருமையுட னுண்மை
யில் லாதவொரு பிள்ளையைப் பெற்றென்
பெறாம லென்ன, பிரியமா யுள்ளன்பி லாத
வர்கள் நேசம் பிடித்தென் விடுக்கி லென்ன,
தெருளாக மானமில் லாததொரு சீவனஞ்
செய்தென் செயாம லென்ன, தேகியென வ
ருபவர்க்கீயாத செல்வஞ் சிறந்தென் முறிந்து
மென்ன, மருவிளமை தன்னிலில் லாதகன்
னிகைபின்பு வந்தென் வராம லென்ன, மயி
லேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை
மேவு குமரே சனே. (உசு)

உபகாரமில்லாதவை.

கடல்நீர் மிகுத்தென்ன வொதிதான் பெ
ருத்தென்ன காட்டிலவு மலரிலென்ன, கரு
வேல் பழுத்தென்ன நாய்ப்பால் சுரந்தென்
ன கானின்மழை பெய்து மென்ன, அடர்க
ழுதை லத்திநில மெல்லாங் குவிந்தென்ன
வரியகுண மில்லாதபெண், அழகா யிருந்தெ

ன்ன வாஸ்தான கோழைபல வரியநா லோ
தியென்ன, திடமினிய பூதம்வெகு பொன்கா
த் திருந்தென்ன திறன்மிகுங் கரடி. மயிர்தா
ன், செறிவாகி நீண்டென்ன வஸ்த்ரபூஷண
மெலாஞ் சித்திரத் துற்று மென்ன, மடமிகு
ந் தெவருக்கு முபகார மில்லாத வம்பர்வாழ்
வுக்கு நிகராம், மயிலேறி விளையாடு குகனே
புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௨௭)

பதரெனப்படுவோர்.

தன்பெருமை சொல்லியே தன்னைப்புக
ழ்ந்தபதர் சமர்கண் டொளிக்கும் பதர், தக்க
பெரியோர்புத்தி கேளாத பதர்தோழர் தம்
மொடு சலிக்கும் பதர், பின்புகா ணுவிடந்தன்
னிலே புறணிபல பேசிக் களிக்கும் பதர், பெ
ற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர்
பெண்புத்தி கேட்கும் பதர், பொன்பண மிரு
க்கவே போயிரக் கின்றபதர் பொய்சாக்ஷி
சொல்லும் பதர், புவியோர் நடத்தையை யிக
ழ்ந்தபதர் றன்மனைவி புணர்தல்வெளி யாக்
கும் பதர், மன்புணரும் வேசையுடன் விபச
ரிக் கின்றபதர் மனிதரிற் பதரென் பர்காண்,
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு ம
லைமேவு குமரேசனே. (௨அ)

காணுவிடிற் றுயரப்படுமவை.

இரவிகா ணுவனச மாரிகா ணுதபயி ரிந்
துகா ணுத குமுதம், எந்தல்கா ணுநாடு கணா

கள்களுவோட மின்சொல்களுவிருந்து,
சுரபிகளுதகன் றன்னைகளுமதலை சோலை
களுத வண்டு, தோழர்களுநேயர் கலைக
ள்களுதமான் சோடுகளுதபேடு, குரவர்
களுசபைதி யாகிகளுவறிஞர் கொழுநர்
களுத பெண்கள், கொண்டல்களுதமயி
ல்சிறுவர்களுவாழ்வு கோடைகளுத கு
யில்கள், வரவுகளுதசெல விவையெலாம்
புவிமீதில் வாழ்வுகளுவி ளமையாம், மயி
லேறி விளையாடு குகனைபுல் வயனீடு மலை
மேவு குமரேசனே. (உகூ)

வியாதிமூலங்கள்.

கல்லினல் மயிரினல் மீதூண் விரும்ப
லாற் கருதிய விசாரத் தினல், கடுவழி நடக்
கையால் மலசல மடக்கையாற் கனிபழங் கறி
யுண் ணலால், நெல்லினு லுமியினு லுண்ட
பின் மூழ்கலால் நித்திரைக ளில்லா மையா
ல், நீர்ப்பகையி னுற்பனிக் காற்றிலுட னேறு
தலால்,நீடுசரு கிலையூறலால், மெல்லிநல் லா
ர்கலவி யதிகமுள் விரும்பலால் வீழ்மலஞ் சி
க்கு கையினல், மிகுசுமை யெடுத்தலா லிள
வெயிற் காய்தலால் மெய்வாட வேலை செய
லால், வல்லிரவி லேதயிர்கள் சருகாதி யுண்
ணலால் வன்பிணிக் கிடமென் பர்காண், மயி
லேறி விளையாடு குகனைபுல் வயனீடு மலை
மேவு குமரேசனே. (௩0)

சேத்துஞ் சாகாதவர்.

அனைவர்க்கு முபகார மாம்வாவி கூவ முண் டாக்கினோர் நீதி மன்னர், அழியாத தே வாலயங்கட்டி வைத்துளோ ரகரங்கள் செய் த பெரியோர், தனையொப்பிலாப்புதல்வனைப் பெற்ற பேர்பொருது சமர்வென்ற சுத்த வீரர், தரணிதனில் நிலைநிற்க வெந்நாளு மாறாத தருமங்கள் செய்த பேர்கள், கனவித்தை கொண்டவர்க ளோயாத கொடையாளர் கா வியஞ் செய்த கவினர், கற்பினின் மிகுத்த வொரு பத்தினி மடந்தையைக் கடிமணஞ் செய்தோர் களிம்,மனிதர்கள் சரீரங்கள்போ கினுஞ் சாகாத மனிதரிவ ராகு மன்றோ, மயி லேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரே சனே. (ஙக)

சாகாதிருந்துஞ் செத்தவர்.

மாறாத வறுமையோர் தீராத பிணியா ளர் வருவேட்ட கத்தி லுண்போர், மனைவி யை வழங்கியே சீவனஞ் செய்குவோர் மன் னுமொரு ராஜ சபையில், தூறாக நிந்தைசெ ய் துய்குவோர் சிவிகைகள் சுமந்தே பிழைக் கின் றபேர், தொலையா விசாரத் தழுந்துவோ ர் வார்த்தையிற் சோர்வுபட லுற்ற பெரியோ ர், வீறாக மனையா டனக்கஞ்சி வந்திடு விருந் தினை யொழித்து விடுவோர், வீம்புடன் செ ல்லாத விவகார மதுகொண்டு மிக்கசபையே

று மசடர், மாறுக விவிலா முயிருடன் செத்தசவ மாகியொளி மாய்வர் கண்டாய், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௩௨)

சிறிதும் பயன்படாதவர்.

பதராகி னுங்கன விபூதிவிளை வித்திடும் பழமைபெறு சுவரா கிலும், பலருக்கு மறைவாகு மாடுரிஞ் சிடுமலம் பன்றிகட் குபயோகமாம், கதமிகு கடாவென்னி லுழுதுபுவி காக்கும்வன் கழுதையும் பொதிசு மக்கும், கல்லெனிற் றேவர்களு மாலயமு மாம்பெருங் கான்புற்று மரவு மனையாம், இதமிலாச் சவமாகி னுஞ்சிலர்க் குதவிசெயு மிழிவுறு குரங்கா யினும், இரக்கப் பிடித்தவர்க்குதவிசெயும் வாருகோ லேற்றமா ளிகைவி ளக்கும், மதமது மிகும்பரம லோபரா லுபகார மற்றொருவ ருக்கு முண்டோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

உலுந்தரியல்பு.

திரவியங் காக்குமொரு பூதங்கள் போற்பணந் தேடிப் புதைத்து வைப்பார், சிலைநலமாகவுங் கட்டார்கள் நல்லமுது செய்துணரறமுஞ் செயார், புரவலர்செய் தண்டந் தனக்கும்வலு வாகப் புகுந்திருட ருக்கு மீவார், புலவரைக் கண்டவுட னேடிப் பதுங்குவார் புராணிகர்க் கொன்று முதவார், விரகறிந் தே

பிள்ளை சோறுகறி தினுமளவில் வெகுபணம் செலவா கலால், விளையாடு கிழவனும் பிள்ளையே பிள்ளையென மிகுசெட்டி சொன்ன கதைபோல், வரவுபார்க் கின்றதே யல்லாது லோபியர்கண் மற்றொருவ ருக்கீ வரோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. (௩௪)

திருவாழிடங்கள்.

கடவா ரணத்திலுங் கங்கா சலத்திலுங் கமலா சனந்தன் னிலும், காகுத்தன் மார்பிலுங் கொற்றவ ரிடத்திலுங் காலியின் கூட்டத் திலும், நடமாடு பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத நல்லோ ரிடந்தன் னினும், நல்லசுப லக்ஷண மிகுந்தமனை தன்னிலும் ரணசுத்த வீரர் பாலும், அடர்கே தனத்திலுஞ் சுயம்வரந் தன்னிலு மருந்துளசி வில்வத் திலும், அலர்தரு கடப்பமலர் தனிலுமிர தத்திலு மதிகருணை மானரூப, மடவா ரிடத்திலுங் குடிகொண்டு திருமாது மாறா திருப்ப ளென்றே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. (௩௫)

மூதேவி வாழிடங்கள்.

சோரமங் கையர்கள் நிச முறையார்கள் வாயினிற் சூதகப் பெண்கள் நிழலில், சூளையிற் சூழ்தலுறு புகையிற்க ளேபரஞ் சுடுபுகையில் நீசர் நிழலில், காரிரவி லரசுநிழ லிற்

கடா நிழலினெடு கருதிய விளக்கு நிழலில், காமுகரி னிஷ்டையில் லாதவர் முகத்திற் கடு ஞ்சினத்தோர்சபையினில், ஈரமில் லாக்களர் நிலத்தினி லிராத்திரியி லிழியுமறுபானர் பாலில், இலைவேல் விளாநிழலி னிதமழுக் கடைமனையி லேனநா யசகரத்தூள், வாரியமுறத்தூள் பெருக்குதூண் மூதேவி மாரு திருப்ப ளென்பார், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

திருந்தினுந் திருந்தாமை.

கட்டியெரு விட்டுச் செழுந்தேனை வார்க்கினுங் காஞ்சிரங் கைப்பு விடுமோ, கழுதையைக் கட்டிவைத் தோமம் வளர்க்கினுங் கதிபெருங் குதிரை யாமோ, குட்டியர வுக்கமுதளித்தே வளர்க்கினுங் கொடுவிஷம லாது தருமோ, குக்கனெடு வாலுக்கு மட்டையைக் கட்டினுங் கோணுமலே நிமிருமோ, ஒட்டியே குறுணிமை யிட்டாலு நயமிலா யோனிகண் ணாகி விடுமோ, உலவுகன கற்பூர வாடைபல கூட்டினு முள்ளியின் குணமாறுமோ, மட்டிகட் காயிரம் புத்திசொன் னாலுமதின் மார்க்கமறி யாதை வருமோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௩௭)

குறிப்பறிதல்.

மனதிற் கடும்பகை முகத்தினா லறியலாம் மானிலப் பூடுகளெலாம், மழையினா லறி

யலாம் நல்லார்பொலார்தமை மக்களா லறிய லாகும், கனமருவு சூராச் சமரினி லறியலா ங் கற்றவொரு வித்து வானைக், கல்விப்ர சங் கத்தி னலறிய லாங்குணங் களை நடையி னல றியலாம், தனதக மடுத்தது பளிங்கினி லறிய லாஞ் சாதிசொல் லால றியலாம், தருநீதி கேள்வியா லறியலாம் பிணிகளைத் தாதுக்க ளால றியலாம், வனசவிக சிதவதன பரிபூர ணனந்த வாலவடி வான வேலா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு கு மரேசனே. (௨அ)

துணமாறுமை.

குணமிலாத் துஷ்டமிரு கங்களையு நய குணங் கொண்டுட் படுத்தி விடலாம், கொடி யபல விஷநோய்க ளியாவுமௌ ஷதமது கொடுத்துத் திருப்பி விடலாம், உணர்விலாப் பிரமராக்ஷசமூதற் பேய்களையுகந்துகூத்தாட் டி விடலாம், உபாயத்தி னற்பெரும் பறவை க்கு நற்புத்தி யுண்டாக்க லாமுயிர்பெறப், பி ணமதை யெழுப்பலா மக்கினி சுடாமற்பெரு ம்புன லெனச்செய் யலாம், பிணியையு மகற் றலாங் காலதா தூவனையும் பின்புவருகென் று சொலலாம், மனலையுங் கயிறுய்த் திரிக்க லாங் கபவர்குண மட்டுந் திருப்ப வசமோ, ம யிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே. (௨௯)

இந்தீக்குணத்தோ ரிவ்விலங்குபோல்வரெனல்.

தான்பிடித் ததுபிடிப் பென்றுமே லவர்
புத்தி தள்ளிச்செய் வோர்கு ரங்கு, சபையிற்
குறிப்பறிய மாட்டாம னின்றவர் தாம்பயனி
லாத மரமாம், வீம்பினு லெளியவரை யெதிர்
பண்ணி னிற்குமொரு வெறியர்குரை ஞமலி
யாவார், மிகநாடி வருவோர் முகம்பார்த்தி
டாலோபர் மேன்மையில் லாத கழுதை, சோ
ம்பலொடு பெரியோர் சபைக்குட் படுத்திடுந்
தூங்கலெ சண்டிக் கடா, கூடுட னடுத்தோர்க்
கிடுக்கணே செய்திடுந் துஷ்டனே கொட்டு
தேளாம், மாம்பழந் தனைவேண்டி யந்நாளி
லீசனை வலமாக வந்த முருகா, மயிலேறி வி
ளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு கும
ரேசனே. (௪௰)

அற்பர்வாழ்வால் குணம் வேறுபடுதல்,

அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமா னல்வி
ழிக்கியாவருரு வுந்தோன் றிடா, தண்டிநின்
றேநல்ல வார்த்தைக ளுரைத்தாலு மவர்செ
விக்கேறி டாது, முற்பழகு மானபேர் வருகி
லும் வாருமென மொழியவும் வாய்வ ராது,
மோதியே வாதப்பிடிப்புவந் ததுபோல முன்
கா லை யகல வைப்பார், விற்பன மிகுத்தபெரி
யோர்செய்தி சொன்னாலும் வெடுவெடுத் தே
சி நிற்பார், விருதா மகத்துவப் பேயனு சவுக்
கடி விரும்பொறு நிருமென்பார், மற்புயந்

தனினீபமாலையணிவேலாலனே மார்பனே வடிவேலவா, மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. (சக)

தீங்குதிளோ ரிக்கோள்போல்வ ரெனல்.

அன்னைதந் தையர்புத்தி கேளாத பிள்ளையோ அஷ்டமச் சனியாகுவான், அஞ்சாம லெதிர்பேசி நிற்குமனை யாள்வாக்கிலங்கார கச்சன் மமாம், தன்னைமிஞ் சிச்சொன்ன வார்த்தைகே ளாவடிமை சந்திராஷ் டகமென்னலாம், தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ சார்ந்தசன் மச்சூரியன், நன்னயமிலாதவஞ் சனைசெய்த தமையன்மூன் றுமிடத் தில்வியாழம், நாடொறும் விரோதமிடு கொண்டோன் கொடுத்துளோன் ராகுகேதுக்க ளெனலாம், மன்னயனை யன்றுசிறை தனிலிட்டு நம்பற்கு மந்திர முரைத்த குருவே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சஉ)

நல்லினஞ் சேர்பயன்.

சந்தன விருக்ஷத்தை யண்டி நிற்கின்ற பல தருவுமவ் வாசனைதரும், தங்கமக மேருவை யடுத்திடுங் காக்கையுஞ் சாயல்பொன் மயமே தரும், பந்தமிகு பாலுடன் விளாவிய தணீரெலாம் பால்போல் நிறங்கொடுக்கும், அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடி லடுத்ததும் பசுமையாகும், ஆனபெரி யோர்களொ

டு சகவாச மதுசெய்யி லவர்கள்குணம் வரு மென் பர்காண், மந்தர நெடுங்கிரியின் முன் கடல் கடைந்தவரி மருகமெய்ஞ் ஞான முரு கா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. (சங)

வலியோரையு மழ்விடாமை.

அன்றுமுடி சூடிவ் திருக்கரகு ராமன் மு னருங்கா டுறைந்த தென்ன, அண்டரெல் லாமமிர்த முண்டிடப் பரமனுக்காலம் லபித் த தென்ன, வென்றிவரு தேவர்சிறை மீட்ட நீ களவில்வேடிச்சையைச் சேர்ந்த தென்ன, மேதினி படைக்குமய னுக்குமொரு சிரபேகி வெஞ்சிறையி லுற்ற தென்ன, என்றுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோன தென் னகாண் வல்ல மையினுல், எண்ணத்தி னு லொன்றும் வாராது பரமசிவ னெத்தனப் ப டிமுடியுமாம், மன்றுதனி நடனமிடு கங்கா தரன்பெற்ற வரபுத்ர வடிவே லவா, மயிலே றி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. (சச)

பெரியோர் வாக்கியபரிபாலனஞ் செய்தோர்.

தந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய் தவன் றசரத குமார ராமன், தமையனருள் வாக்யபரி பாலனஞ் செய்தோர் தருமனுக் கிளைய நால்வர், சிந்தையி லுணர்ந்துகுரு வா க்யபரிபாலனஞ் செய்தவ னரிச்சந்திரன், தே

கியென் ரேர்க்கிலை யெனுவாக்ய பாலனஞ்
செய்தவன் ருன கன்னன், நிந்தைதவிர் வா
க்ய்பரி பாலனஞ்செய்தவன் நீள்பெலமிகுத்
த வனுமான், நிறையுடன் பத்தாவின் வாக்ய
பரி பாலனம் நிலத்தினி னளாகி னிசெய்தா
ள், மந்தைவழி கோயில்தள முங்குலவு தும்
பிமுகன் மகிழ்தர வுகந்த துணைவா, மயிலேறி
விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு கு
மரேசனே. (சரு)

முயற்சியின்மிக்க தூழெனல்.

வங்காள மேறுகினும் வாருகோலொரு
காசு மட்டன்றி யதிக மாமோ, வானேறி யுய
ரப் பறந்தாலு மூர்க்குருவி வண்ணப் பருந்
தா குமோ, கங்கா சலந்தனின் மூழ்கினும்பே
ய்ச்சுரைக்காய்நல்ல சுரையா குமோ, கடலுக்
குள் நாழியை யமுக்கியே மொண்டிடிற் கா
ணுமோ நாழிதான், ஐங்காத மோடினுந்
தன்வினைக டன்னைவிட் டடையாமல் நீங்கி
விடுமோ, ஆரிடஞ்சென்றாலும் வெகுதொலை
கள் சுற்றினு மமைத்தபடி யன்றி வருமோ, ம
ங்காத செந்தமிழ்க் கொண்டுநற் கீரற்கு வந்
ததுயர் தீர்த்த முருகா, மயிலேறி விளையாடு
குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

இடும்பா லழிவு.

சூரபத் மன்பெலமு மிராவணன் றீரமு
ந் துடுக்கான கஞ்சன் வலியும், துடியான விர

ணியன் வரப்ரசாதங்களுந் தொலையாத வாலி
திடமும், பாரமிகு துரியோதனாதிநூற் றுவ
ரது பராக்கிரமமதுகைடவர், பாரிப்புமாபெ
லிதனாண்மையுஞ் சோமுகன் பாங்கிலுறு வ
ல்லமைகளும், எரணவு கீசகன் கனதையுந்
திரிபுர ரொண்ணமுந் தக்க னெழிலும், இவர்
களது சம்பத்து நின்றவோ வவரவ ரிடும்பா
லழிந்த வன்றோ, மாரனைக் கண்ணா லெரித்த
ருள் சிவன்றந்த வரபுத்ர வடிவேலவா, மயி
லேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமே
வு குமரேசனே. (சஎ)

நட்பு நிலை.

மாமதியின் முயலான ததுதேய் வுருத்
தேய்ந்து வளருமப் போது வளரும், வாவித
னிலாய்பல்கொட் டிகளதனி னீர்வற்றின் வ
ற்றிடும்பெருகி லுயரும், பூமருவு புற்பூடு கோ
டையிற் றீய்ந்திடும் பொங்குகா லந்தழைக்
கும், புண்டரிகமிரவிபோ மளவிற் குவிந்திடு
ம்போதுதய மாகின் மலரும், தேமுட லிளை
கிலுயிர் கூடவு மிளைக்குமது தேறிலுயி ருள்
சிறக்கும், சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தா
லும் நல்லோர் சினேகமப் படியாகுமே, வா
ன சொரூபமத யானைமுக னுக்கிளைய வால
ருபரவேலவா, மயிலேறி விளையாடு குகனே
புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சஅ)

கைப்பல னுமவை.

பருவத்திலேபெற்ற சேயும் புரட்டாசி பாதிசம் பாநடுகையும், பலமினிய வாடிதனிலானைவால் போலவே பயிர்கொண்டு வருகரும்பும், கருணையொடு மிக்கநா ணயமுளோர் கையினிற் கடனிட்டு வைத்த முதலும், காலமது நேரிற் றனக்குறுதி யாகமுன் கற்றுணர்ந்திடுகல் வியும், விருதரச ராக்கண்டு பழகிய சினேகமும் விவேகிகட் குபகா ரமாம், வீணல்ல விவையெலாங் கைப்பலன தாகவபி விர்த்தியாய் வருமென் பர்காண், மருவுலா விய நீப மாலையுந் தண்டரள மாலையும் புனைமார் பனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. (௩௬)

சமயத்துக் குதவாதவை.

கல்லாது புத்தகந் தனிலெழுதி வீட்டினிற் கட்டிவைத் திடுவித் தையும், காலங்களுக்குதவ வேண்டுமென் றன்னியன் கையிற் கொடுத்த பொருளும், இல்லாளை நீக்கியே பிறர்பாரி சதமென் றிருக்கின்ற குடிவாழ்க்கையும், ஏறுமா றாகவே தேசாந் தரம்போயிருக்கின்ற பிள்ளை வாழ்வும், சொல்லான தொன்றுமவர் மனமான தொன்றுமாய்ச்சொல்லும்வஞ் சகர்நேசமும், சுகமதா யுண்டென் றிருப்பதெல் லாந்தருண துரிதத்தி லுதவா துகாண், வல்லான கொங்கைமட மாது

தெய் வானைகுற வள்ளிபங் காள னேயா, மயி
யிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை
மேவு குமரே சனே. (ருய)

திரும்பமாட்டாதவை.

ஆடரவின் வாயினி லகப்பட்ட தவளை
யும் யானைவா யிற்க ரும்பும், அரிதான கப்ப
லிற் பாய்மரக் காற்றினி லகப்பட்டு மெலிகா
க் கையும், நாடரிய வேதாளா வார்த்துக் கொ
டுத்ததும் நமன்கைக்கு ளான வுயிரும், நல
மாக வேயணை கடந்திட்ட வெள்ளமும் நா
ய்வேட்டை பட்ட முசலும், தேடியுண் பார்
கைக்கு ளானபல வுடைமையுந் தீவாதை யா
னமனையும், திரள்கொடுங் கோலரசர் கைக்கே
று பொருளுந் திரும்பிவா ராவென் பர்காண்,
மாடமிசை யன்னக்கொடித்திரள் கொள் சோ
ணாடு வாழவந் திடுமு தல்வனே, மயிலேறி
விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவுகும
மரே சனே. (ருக)

இதினுமிது நன்றென்பவை.

கடுகடுத் தாயிரஞ் செய்குவதி னின்சொ
லாற் களிகொண் டழைத்தல் நன்று, கனவே
ள்வி யாயிரஞ் செய்வதிற் பொய்புரா கருத்
தொடு சொலாமை நன்று, வெடுவெடுக் கின்
றதோ ரவிவேகி யுறவினில் விவேகியொடு
பகைமை நன்று, வெகுமதிக ளாயிரஞ் செய்
வதி னாக்காசு வேளைகண் டுதவல் நன்று,

சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கி
ங்கு சற்றுமிலை யென்னல் நன்று, சம்பத்து
டன்பிணியின் மெலிகுவதில் நோயற்ற தாரி
த்தி ரியநன் றுகாண், மடுவினிற் கரியோல
மென்னவந் தருள்செய்த மான்மருக னன
முதல்வா, மயிலேறிவிளையாடு குகனேபுல் வ
யனீடு மலைமேவு குமரே சனே. (௩௨)

பலகூடினும் ஒன்றுக் கீடாகாதவை.

தாரகைக ளொருகோடி வானத் திருக்
கினுஞ் சந்திரற் கீடா குமோ, தாருவிற் கொ
டிதொனிகள் பலகூடி னுமொரு தம்பட்ட
வோசை யாமோ, கோரமிகு பன்றியின் குட்
டிபல கூடினொரு குஞ்சரக் கன்று குமோ,
கொட்டிமலர் வாவியிற் பலகூடி னுமொரு
கோகனக மலரா குமோ, பாரமிகு மாமலைக
ள் பலகூடி னுமொரு பைம்பொன்மக மே
ரு வாமோ, பலனிலாப் பிள்ளைக ளனேகம்
பிறந்தும்விற் பன்னொருவ னுக்கு நிகரோ
வாரணக் கொடியொரு கரத்திற் பிடித்தொன்
றில் வடிவே லணிந்த முருகா, மயிலேறி வி
ளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு கும
ரே சனே. (௩௩)

அருமை யறிதல்.

மணமாலை யருமையைப் புனைபவர்க
ளேயறிவர் மட்டிக்கு ரங்கறியுமோ, மக்களு
டை யருமையைப் பெற்றவர்களேயறிவர் ம

லடிதா னறிவ துண்டோ, கணவருடை யரு
மையைக் கற்பான மாதறிவள் கணிகையா
னவளறிவளோ, கருதுமொரு சந்தியின்பா
ண்டமென் பதைவருங் களவான நாயறியு
மோ, குணமான கிளியருமை தன்னைவளர்த் த
வரறிவர் கொடியபூ னையுமறியுமோ, குலவு
பெரியோரருமை நல்லோர்களேயறிவர் கொ
டுமூடர் தாமறிவரோ, மணவாளனீயென்று
குறவள்ளி பின்றொடர வனமூடு தழுவு மழ
கா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௩௪)

தீச்சார்பாற் பயன்படாதவை.

மடுவினிற் கஞ்சமல ருண்டொருவரணு
காமல் வன்முதலை யங்கிருக்கும், மலையினிற்
றேனுண்டு சென்றொருவர் கிட்டாமன் மரு
வியதில் வண்டிருக்கும், நெடுமைதிகழ் தா
ழைமல ருண்டொருவ ரணுகாமல் நீங்காத
முள்ளிருக்கும், நீடுபல சந்தன விருக்ஷமு
ண் டணுகாது நீரளவு சூழ்ந்திருக்கும்,
குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்க ளங்கிருக்கும், கொடுக்குந் தியா
கியுண் டிடையூறு பேசுங் கொடும்பாவி யுண்
டு கண்டாய், வடிவையுங் கடிவையும் பொருவு
மிரு கண்ணிதற வள்ளிக் குகந்த கணவா, ம
யிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு ம
லைமேவு குமரேசனே. (௩௫)

கணிகையரிழிவு.

தேவதா சிகள்வீடு சந்தைப் பெரும்பே
ட்டை சேர்ந்திடு படுக்கை வீடு, தெருவாசல்
கட்டில்பொது வம்பல முடுத்தநதுகில் செய்ய
சூதாடு சாலை, மேவலா கிடகொங்கை காயா
டு திரள்பந்து விழிமணம் கவர்தூண் டிலாம்,
மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோகமொ
ரு மின்னலிரு துடைசர்ப்பமாம், ஆவலா கி
யவல்கு லோதண்டம் வாங்குமிட மதிகபட
மாமனதுகல், அமிர்தவா யிதழ்சித்ர சாலை
யெச் சிற்குழி யவர்க்காசை வைக்க லாமோ,
மாவடிவு கொண்டே யொளித்தவொரு சூர
னை வதைத்தவடி வேலா யுதா, மயிலேறி வி
ளையடு குகனேபுல் வயனீடு மலைமேவு கும
ரே சனே. (ருகூ)

கலிகாலக் கொடுமை.

தாய்புத்தி சொன்னால் மறுத்திடுங் கால
மூபர் தந்தையைச் சிறு காலம், சற்குருவை
நிந்தைசெய் காலமெய்க் கடவுளைச் சற்றுமெ
ண்ணாத காலம், பேய்தெய்வ மென்றுப சரி
த்திடுங் காலம்பொய் பேசுவோர்க் கேற்ற கா
லம், பெண்டாட்டி வையினுங் கேட்கின்ற கா
லநற்பெரியர்சொற் கேளாத காலம், தெய்வுட
ன் பெரியவன் சிறுமையுறு காலமிது சிறியவ
ன் பெருநு காலம், செருவில்விட் டோடி
னோர் வரிசைபெறு காலம்வசை செப்புவோ

ர்க் குதவு காலம், வாய்மதம் பேசிவிடு மதியா
ய காரர்க்கு வாய்த்தகலி கால மையா, மயிலே
றி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமே
வு குமரேசனே. (௩௭)

அவரவர்க் குரியவை.

கல்வியொரு கனமுறச் சபையின்மேல்
வட்டமாக் காணவைப்போன்பிதாவாம், கற்
றுணர்ந்தேதனது புகழாற் பிதாவைப்ர காச
ஞ்செய் வோன்புத் திரன், செல்வமிகு கண
வனே தெய்வமென் றனுதினஞ் சிந்தைசெய்
பவள்மனைவியாம், சினேகிதன் போலவேய
ன்புவைத் துண்மைமொழி செப்புமவனே
சோதரன், தொல்வளமிருந்தநூற் கலை
தெரிந் துறுதிமொழி சொல்லுமவனேகுரவ
னும், சொன்னநெறி தவறுமல் வழிபாடுசெ
ய்துவரு துய்யனே யினிய சீடன், வல்விட
மிஞ்சுசுர குஞ்சரியுடன் குறவர் வஞ்சியை ம
ணந்த கணவா, மயிலேறி விளையாடு குகனே
புல் வயனீடு மலைமேவு குமரேசனே. ( )

சிறுமையிற் பெருமை.

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுள
து திருமுடியின் மேலிருக்கும், திகழ்சிப்பியு
டலிற் சனித்தமுத் தரசனது தேகத்தின் மே
லிருக்கும், போற்றிடு பூச்சியின் வாயினூல்
பட்டென்று பூசைக்கு நேசமாகும், புகலரிய
வண்டெச்சி லானதேன் றேவர்கொள் புனி

தவபிஷேகமாநம், சாற்றியபுலாலொடுபிறந்தகோரோசனை சவாதுபுழுகனைவர்க்குமாம், சாதிபீனத்திற் பிறக்கினுங் கற்றோர்கள் சபையின்மேல் வட்டமன்றோ, மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர வைத்தமெய்ஞ் ஞான முதலே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. ()

செய்யத் தகாதவை.

தானுசரித்துவந்தெய்வமிது வென்று பொய்ச் சத்தியஞ் செயில்விடாது, தன்வீட்டிலேற்றிய விளக்கென்று முத்தந் தனைக் கொடுத்தாலதுசுடும், ஆனாலு மேலவர்கண் மெத்தவுந் தணமென்றடாதது செயிற்கெடுதியாம், யானைதான் மெத்தப் பழக்கமானாலுஞ்செயாதுசெய் தார்கொன்றிடும், தீனை இனிதென்று மீதூண் விரும்பினுற்றேகபீடைகளை தரும், ஜெகராஜர் சனுவென்னவேலாத காரியஞ் செய்தான் மனப்பொருர் காண், வானுடு புகழுமொரு சோணாடு தழையவிவண் வந்தவதரித்த முதலே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௩௰)

நடுவு நிலைமை.

வந்தவிவகாரத்தி லினியபரிதானங்கள் வருமென்று நேசமொன்றும், வன்பகைஞரொன்றுமயலோன்று மிக்கதனவானென்று மேழையென்றும், இந்தவகைகையைக்குறித்

தொருபட்ச பாதமோ ரெள்ளள வுமைத்தி டாமல், எண்ணமுட னேலிகித புத்தியொடு சாட்சிக்கு மேற்கச் சபா சமதமா, முந்தவிரு தலையுஞ் சமன்செய்த கோல்போன் மொழிந் திடிற் றரும மதுகாண், மூனைவிம னுடல்பாதி மிருகந் தனக்கென் றுமுன் றருமர் சொன்ன தலவோ, மைந்தனென வன்றுமை முலைப்பால் கொடுத்திட வளர்ந்தருள் குழந்தை வடிவே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௩௭)

பஞ்சபாதகம்.

ஓரவிவ காரமா வந்தவர் முகம்பார்த் துரைப்போர் மலைக்குரங்காம், உயர்வெள் ளெருக்குடன் முளைத்துவிடு மவரில்ல முறையுமூர் பாழ்நத் தமாம், தாரணியி லிவர்கள்கிளை நெல்லியிலை போலுருஞ் சமானமா வெருபிறப்பும், சந்ததியி லாதுழல்வ ரவர்முகத் தினின்மூத்த தையலே குடியிருப்பாள், பாரமிவ ரென்றுபுவி மங்கையு நடுங்குவள் பழித்ததுர் மரண மாவர், பகர்முடிவி லேரவுர வாதிநர கத்தனு பவிப்பரெப் போது மென்பர், வாரமுட னருணகிரி நாதருக் கனுபூதி வைத்தெழுதி யருள்குருபரா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

ஒன்றிலாமையாற் சிறவாதன வ.

கொங்கையில் லாதவட் கெத்தனைப் பணியுடைமை கூடினும் பெண்மை யில்லை, கூ

றுநிறை கல்வியில் லாமலெத் தனைகவிதை கூறினும் புலமையில்லை, சங்கையில் லாதவர்க் கெத்தனை விவேகந் தரிக்கினுங் கனதையில்லை, சட்சுவை பதார்த்தவகை யுற்றாலு நெய்யிலாச் சாதமுந் திருப்தியில்லை, பங்கய மிலாமலெத் தனைமலர்கள் வாவியிற் பாரித்து மேன்மை யில்லை, பத்தியில் லாமல்வெகு நியமமா யர்ச்சனைகள் பண்ணினும் பூசை யில்லை, மங்கைய ரிலாமனைக் கெத்தனை யருஞ்செல்வம் வரினுமில் வாழ்க்கையில்லை, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௬௫)

அளவுபடாதவை.

வாரியா ழத்தையும் புனலெறியு மலைகளையு மானிடர்கள் சன்னத் தையும், மன்னவர்க ணினைவையும் புருஷர்யோ கங்களையும் வானினுயர் நீளத் தையும், பாரிலெழு மணலையும் பலபிரா ணிகளையும் படியாண்ட மன்ன வரையும், பருப்பதத் தின்னிறையு மீசுரச் செயலையும் பனிமாரி பொழுது ளியையும், சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழு கவியையுஞ் சித்தர்தம துள்ளத் தையும், தெரிவையர்கள் சிந்தையையு மிவ்வள வெனும்படி தெரிந்தள விடக்கூடுமோ, வாரிசமடந்தைதுதி கொண்டதெடு மாலுக்கு மருகனென வந்த முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௬௬)

பிறர்மனை நயத்தல்.

தந்தார மன்றியே பரதார மேனினைவு
தனைவைத்த காமு கர்க்குத், தயையில்லை நி
சமில்லை வெட்கமில்லை சமரினிற் றைரியஞ் சற்
றுமில்லை, அந்தார மிலலைதொடர் முறையி
ல்லை நிலையில்லை யறிவில்லை மரபுமில்லை, யற
மில்லை நிதியில்லை யிரவினிற் றனிவழிக் கச்ச
மோ மனதிலில்லை, நந்தாத சனமில்லை யின
மில்லையெவருக்குநட்பில்லை கனதை யில்லை,
நயமில்லை யிளமைதனில் வலிமையிலை முத்
திபெறு ஞானமிலை யென்பர் கண்டாய், மந்
தார பரிமள சுகந்தாதி புனையுமணி மார்பனே
யருளா ளனே, மயிலேறி விளையாடு குகனே
புல் வயனீடு மலைமேவு குமரேசனே.(௩௫)

மானம் விடாமை.

கனபார மேறிற் பிளந்திடுவ தன்றியே
கற்றூண் வளைந்தி டாது, கருதலர்க ளாலு
டைந் தாலுமுயி ரளவிலே கனசூர னமரின்
முறியான், தினமோ ரிடுக்கண்வந் துற்றாலும்
வெங்கைதோல் ஜீவனள விற்கொ டாது, தி
மான பெரியோர் சரீரங்கள் போகினுஞ் செ
புமுறை தவறி டார்கள், வனமேறு கவரிம
வுயிர்போகு மளவுந்தன் மயிரினொன் று
கொ டாது, வாராத வாபத்து வருகினுங் க
புடைய மாதுநிறை தவறி நடவாள், மனத
ர வுனதடைக் கலமென்ற விறந்த வன்சில
தவிர்த்த முருகா, மயிலேறி விளையாடு கு
னேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.(

திருவருட் சிறப்பு.

திருமகள் கடாக்ஷமுண் டானலெவர்க்குஞ் சிறப்புண்டு கனதை யுண்டு, சென்றவழியெல்லாம்பெரும்பாதையாய்விடுஞ் செல்லாத வார்த்தை செல்லும், பொருளொரு துரும்புமரி யாதையாஞ் செல்வமோ புகல்பெருக்காறு போலாம், புவியின்முன் கண்டுமதியாதபேர் பழகினவர் போலவே நேசமாவார், பெருமையொடு சாதியி லுயர்ச்சிதரு மனுதினம்பேரும்ப்ர திஷ்டை யுண்டாம், பிரியமொடு பகையாளி கூடவுற வாகுவான் பேச்சினிற் பிழைவ ராது, வருமென நினைத்த பொருள் கைகூடி வருமதிக வல்லமைகண் மிகவு முண்டாம், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. ()

நட்புநிலை.

கதிரவ னுதிப்பதெங் கேநளின மெங்கேகளித்துள மலர்ந்த தென்ன, கார்மேகமெங்கே பசுந்தோகை யெங்கே கருத்தினட் பானதென்ன, மதியமெங் கேபெருங் குமுதமெங் கேமுக மலர்ந்துமகிழ் கொண்ட தென்ன, வல்லிரவு விடிவதெங் கேகோழி யெங்கே மகிழ்ந்துகூ விடுதலென்ன, நிதியரச ரெங்கே யிருந்தாலு மவர்களொடு நேசமொன் றுயி ருக்கும், நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந் தாலுமவர் நிறைபக்ஷ மறவார்கள்காண்,

மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ மருவுசோ ணாட்ட திபனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கூஅ)

காலமறிதல்.

காகம் பகற்காலம் வென்றிடுங் கூகையைக் கனகமுடி யரசர் தாமும், கருதுஜய காலமது கண்டந்த வேளையிற் காரிய முடித்துவிடுவார், மேகமுங் கார்கால மதுகண்டு பயிர்விளைய மேன்மேலு மாரி பொழியும், மிக்கான வறிவுளோர் வருதருண காலத்தின் மிடியாள ருக்குதவுவார், நாகரிக முறுகுயில் வசந்தகா லத்திலே நலமென் றுகந்து கூவும், நல்லோர் குறித்ததைப் பதறுமல ந்தந்த நாளையின் முடிப்பர் கண்டாய், வாகனைய காலைகன் மாலைபுல் லெனுமுலக வாடிக்கை நிசமல்லவோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கூகூ)

இடனறிதல்.

தரையதனி லோடுதேர் நீள்கடலி லோடுமோ சலதிமிசை யோடு கப்பல், தரைமீதி லோடுமோ தண்ணீரி லுறுமுதலை தன்முனே கரிநிற் குமோ, விரைமலர் முடிப்பரமர் வேணியர வினைவெல்ல மிகுகருட னலாகுமோ, வேங்கைக ளிருக்கின்ற காடுதனி லஞ்சாமல் வேறொருவர் செல்ல வசமோ, தரை

களைப் பெரியோரை யண்டிவாழ் வோர்தமைத் துஷ்டர்பகை யென்ன செய்யும், துணைகண்டு சேரிட மறிந்துசே ரென்றௌவை சொன்னகதை பொய்யல்லவே, வளையூது மாயனை யடுத்தலாற் பஞ்சவர்கள் வன்போர் ஜெயித்த தன்றோ, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (எ௰)

யாக்கை நிலையாமை.

மனுநன்மாந் தாதாமு னவர்களெல்லாரு மண்மே லிருந்து வாழ்ந்து, மடியா திருந்தபே ரில்லையவர் தேடியதை வாரிவைத்தவரு மில்லை, பனியதனை நம்பியே யேர்பூட்டு கதையெனப் பாழான வுடலை நம்பிப், பார்மீதி லின்னம்வெகு நாளிருப் போமென்று பலகோடி நினைவை யெண்ணி, அனீதமாய் விருதாவின் மாய்வதே யல்லாம லன்பாக நின்பதத்தை, யர்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென் றெண்ணுர்க ளாசைவலை யிற்சுழலுவார், வனிதையர்கள் காமாந்த காரமே பகையாகு மற்றுமொரு பகையுமுண்டோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (எக)

வேட்டகத் திகழ்ச்சி.

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடுமளவின் மேன்மேலு முபசரித்து, விருந்துகள் சமைத்துநெய் பாற்றயிர் பதார்த்தவகை

வேண்டுவ வெலாம மைப்பார், ஊட்டமிகு வர்க்கவகை செய்திடுவர் தைலமிட் டுறுதியா ய் முழுகு விப்பார், ஓயாது தின்னவே பாக் கிலை கொடுத்திடுவ ருற்றநா ளலா கிலா, நாட்டமொரு படியிறங் குவதுபோன் மரியா தை நாளுக்கு நாள்கு றைவுறும், நகைசெய் வர் மைத்துனர்க ளலுவல்பார் போவென்று நாளுமன் மாமி சொல்வாள், வாட்டமனை யாளொரு துரும்பாய் மதிப்பளிவன் மட்டி யிலு மட்டியன்றே, மயிலேறி விளையாடு கு கனெபுல் வயனீடு மலைமேவு குமரே சனே.()

செல்வ நிலையாமை.

ஓடமிடு மிடமது மணற்கூடுஞ் கூடுமிட மு மோடமிக வேநடக்கும், உற்றதோ ராற் றின்மடு மேடாகு மேடெலா முறுபுனல்கொ ண் மடுவா யிடும், நாடுகா டாகுமுயர் காடுநா டாகிவிடு நவில்சகடு மேல்கீ ழதாய், நடை யூறு சந்தைபல கூடுமுட னேகலையு நன்னி லவு மிருளாய் விடும், நீடுபகல் போயபின் பி ரவாகு மிரவுபோய் நிறைபகற் போதாய் வி டும், நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செ ழித்திடுவர் நிசமல்ல வாழ்வு கண்டாய், மாடு மனை பாரிசன மக்கணிதி பூஷணமு மருவுக ண வாகு மன்றோ, மயிலேறி விளையாடு குக னேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. ()

பிறந்ததாற் பெறுபேறு

சடமொன் றெடுத்தாற் புவிக்குநல் லவனென்று தன்பேர் விளங்க வேண்டும், சதிருடனி தல்லாது மெய்ஞ்ஞானி யென்றவ தரிக்கவே வேண்டு மல்லால், திடமினிய ரணசூர வீரனிவ னென்னவே திசைமெச்ச வேண்டு மல்லால், தேகியென வருபவர்க் கில்லையென் னுமலே செய்யவே வேண்டு மல்லால், அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவா னாகவே வேண்டு மல்லால், அறிவான துரைமக்க ளாகவர வேண்டுமிவ ரதிகபூ பாலனாயா, வடகுவடு கிடுகிடென வெழுகடலு மலையெறிய மணியுரகன் முடிக ணெரிய, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. (எச)

வேசைநிந்தை.

தேடித்தம் வீட்டிற் பணக்காரர் வந்திடிற்றேகசீ வன்போ லவே, சினேகித்த வும்மையொரு பொழுதுகா ணவிடிற்செல் லுமுதன்ன மென்றே, கூடிச் சுகிப்பபொன் னாசையுன் மேலென்று கூசாம லாணை யிடுவார், கொங்கையை வெடிக்கப் பிடிக்கக் கொடுத்திதழ் கொடுப்பர்சும் பனமுகப்ப, வேடிக்கை பேசியே கைமுதல் பறித்தபின் வேறுபட நிந்தை செய்து, விடவிடப் பேசுவார் தாய்கலகமூட்டியே விட்டுத் துரத்தி விடுவார், வாடிக்

கை யாயிந்த வண்டப் பரத்தையர் மயக்கத்தை நம்ப லாமோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. ()

இதற்கிது உறுதியெனல்.

கைக்குறுதி வேல்கவின் மனைக்குறுதி மனையாள் கவிக்குறுதி பொருளடக்கம், கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சொற்குறுதி கண்டிடிற் சத்ய வசனம், மெய்க்குறுதி முன்பின் சபைக்குறுதி வித்வசனம் வேசையர்க்குறுதி தேடல், விரகருக் குறுதிபெண் மூப்பினுக் குறுதியூண் வீரருக் குறுதி தீரம், செய்க்குறுதி நீரரும் பார்க்குறுதி செங்கோல் செழும்படைக் குறுதி வேழம், செல்வந் தனக்குறுதி பின்னோக ணவர்க்குறுதி சேர்ந்திடும் சர்ச்சனர்களாம், மைக்குறுதி யாகிய விழிக்குறமடந்தைசுர மங்கைமரு வுந்த லைவனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (எ௯)

வறுமையிற் சிறுமை.

வறுமைதான் வந்திடிற் றப்பழுது சொல்லுவாள் மனையாட்டி சற்று மெண்ணாள், வாக்கிற் பிறக்கின்ற சொல்லெலாம் பொல்லாத வசனமாய் வந்து விளையும், சிறுமையொடு தொலையா விசாரமே யல்லாது சிந்தையிற் றைரியமிலை, செய்யசபை தன்னிலே சென்றுவர வெட்கமாஞ் செல்வரைக் காணினும்,

உறுதிபெறு வீரமுங் குன்றிடும் விருந்துவரி
லுயிருடன் செத்தபிணமாம்; உலகம் பழித்தி
டும்பெருமையோர் முன்புசென் றொருவரொ
டு செய்தி சொன்னால், மறுவசன முஞ்சொ
லார் துன்பினிற் றுன்பமிது வந்தணுகி டாத
ருளுவாய், மயிலேறி விளையாடு குகனேபுல்
வயனீடு மலைமேவு குமரேசனே. (௭௭)

தீச்சார்பா னன்மை யிழப்பு.

ஆனதண் ணீரினிழல் பார்த்திடத் தவ
ளைசென் றங்கே கலக்கி யுலவும், ஆயிரம்பே
ர்கூடி வீடுகட் டிடிலேத மறை குரலு முட
னே வரும், எனைநற் பெரியோர்கள் போச
னஞ்செயுமளவி லீக்கிடந் திசைகே டதாம்,
இன்பமிகு பசுவிலே கன்றுசென் றூட்டுதற்
கினியகோ னூத டுக்கும், சேனைமன் னவ
ரொன்ன கருமநிய மிக்கினுஞ் சிறியோர்க ளா
ற்கு றைபடும், சிங்கத்தை யும்பெரிய ரிஷபத்
தை யும்பகைமை செய்ததொரு நரியல்லவோ,
மானையுந் திகழ்தெய்வ யானையுந் தழுவுமணி
மார்பனே யருளாளனே, மயிலேறிவிளையா
டு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேச
னே. (௭௮)

இடையூறும்றும் பயன்படுபவை.

ஆறுதண் ணீர்வற்றி விட்டாலு மூற்று
நீரமுதபா னங்கொடுக்கும், ஆதவனை யொரு
பாதி கட்செவி மறைத்தாலு மப்போது முத

விசெய் வன், கூறுமதி தேய்பிறைய தாக வேகுறையினுங் குவலயத் திருள்சி தைக்கு ம்,கொல்லைதான் சாவிபோய் விட்டாலு மங்குவரு குருவிக்கு மேச்ச லுண்டு, வீறுடலு தாரிதான் மிடியான போதினிலு மிகவுடி வருப வர்க்கு, வேறுவகை யில்லையென் றுரையாதி யன்றளவியந்துள மகிழ்ந்து தவுவான், மாறுபடு சூரசங் காரகம் பீரனே-வடிவேலணிந்த முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. ()

இன்னவர்க் கிது வில்லையெனல்.

சார்பிலா தவருக்கு நிலையேது முதலிலா தவருக்கி லாபமேது, தயையிலா தவர்தமக் குறவேது பணமிலா தார்க்கேது வேசையுறவு, ஊரிலா தவர்தமக் கரசேது பசிவேளை யுண்டிடாற் குறுதி நிலையே, துண்மையில் லாதவர்க் கறமேது முயல்விலார்க் குறுவதொரு செல்வமேது, சோர்விலா தவருக்கு மற்றுமொரு பயமேது சுகமிலார்க் காசை யேது, தூர்க்குண மிலாதவர்க் கெதிராளி யேதிடர்செய் துஷ்டர்க் கிரக்க மேது, மார்புருவ வாலியைய லஸ்திரம் விடுத்தநெடு மான்மருகனான முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (அ௰)

இதினுமிது நன்றெனல்.

பஞ்சரித் தருமைபறி யார்பொருளை யெய்தலிற் பலர்மனைப் பிச்சை நன்று, பரிவாக

வுபசார மில்லா விருந்தினிற் பட்டினி யிருக்கை நன்று, தஞ்சவொரு முயலையடு வென்றிதனில் யானையொடு சமர்செய்துதோற்ற னன்று, சரசகுண மில்லாதபெண்களைச் சேர்தலிற் சன்னியா சித்தனன்று, அஞ்சலார் தங்களொடு நட்பா யிருப்பதனி லரவினொடு பழகுவது நன், றந்தணர்க்காபத்தி லுதவா திருப்பதனிலாருயிர் விடுத்த னன்று, வஞ்சக ருடன்கூடிவாழ்தலிற் றனியே வருந்திடுஞ் சிறுமை நன்று, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (அக)

நிலையாதவை.

கொற்றவர்கள் ராணுவமு மாறுநேராகிய குளங்களுந் தாசி யுறவும், குணமிலார் நேசமும் பாம்பொடு பழக்கமுங் குலவுநீர் விளையாடலும், பற்றலார் தமதிடை வருந்துவிசுவாசமும் பழயதா யாதி நிணரும், பரதாரமாதரது போகமும் பெருகிவரு பாங்கான வாற்றுவரவும், நற்றுமொரு துர்ப்புத்தி கேட்கின்றபேருறவு நல்லமதயானை நட்பும், நாவினல் லுறவுமொரு நாள்போ லிராதிவைக ணம்பப் படாது கண்டாய், மற்றுமொரு துணையில்லை நீதுணை யெனப்பரவும் வானவர்கள் சிறைமீட்டவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (அஉ)

நற்புலவர் தீப்புலவர் செயல்.

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங் கனி விருப்பமொடு தேடி நாடும், மிடைகருங் காகங்களெக்கனி யிருந்தாலும் வேப்பங் கனிக் கு நாடும், எக்காலும் வரிவண்டு பங்கேருக த்தினி லிருக்கின்ற தேனை நாடும், எத்தனை சுக ந்தவகை யுற்றாலு மருள்வண் டினந்துர்ம லத்தை நாடும், தக்கோர்பொருட்சுவை நயங் களெங்கேயென்று தாம்பார்த்து கந்துகொள் வார், தாழ்வான வன்கண்ணர் குற்றமெங்கே யென்று தமிழிலா ராய்வர் கண்டாய், மைக் காவி விழிமாது தெய்வானை யுங்குறவர் வள் ளியுந் தழுவு தலைவா, மயிலேறி விளையாடுகு கனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

தாழ்தற் பெருமை.

வேங்கைகள் பதுங்குதலு மாமுகி லொ துங்குதலும் விரிசிலை குனிந்திடுதலும், மே டமதகன்றிடலும் யானைகளொடுங்குதலும் வெள்விடைகள் துள்ளி விழலும், மூங்கில் கள் வணங்குதலு மேலவரிணங்குதலு முனி வர்கணயந்துகொளலும், முதிர்படை யொ துங்குதலும் வினைஞர்களடங்குதலு முதவி னர் பயந்திடுதலும், ஆங்கரவு சாய்குதலு மகிழ்மல ருலர்ந்திடலு மாயர்குழல் சூடு படலும், அம்புவியி லிவைகாரி யங்களுக் கல்லாம லதனு லிளைப்பு வருமோ, மாங்க

னிக் காவரனே வலமது புரிந்துவளர் மதகரிக் கிளேய முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலேமேவு குமரேசனே.

தெய்வச் செயல்.

சோடாய்மரத்திற் புறாவிரண் டிருந்திடத் தொலேவுகண் டேவேடுவன், தோலாமலவை யெய்ய வேண்டுமென் றெருகணே தொடுத்து வில் வாங்கி நிற்க, ஊடாடி மேலே யெழும் பிடிலடிப்பதற் குலவுரா ஜாளி கூட, உயரப் பறந்துகொண் டேதிரிய வப்போ துகைத்த சிலே வேட னடியிற், சேடாக வல்விஷந் தீண்டவே யவன்விழச் சிலேயிற் றெடுத்த வாளி, சென்றிரா சாளிமெய் தைத்துவிழ வவ்விரு சிறைப்புறு வாழ்ந்த வன்றே, வாடாமலிவையெலாஞ் சிவன்செயல்க ளல்லாதென் மனச்செயலி னாலும் வருமோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலேமேவு குமரேசனே. (அரு)

பாட்லியல்பு.

எழுத்தசைகள் சீர்தளேக ளடிதொடைகள் சிதையா திருக்கவே வேண்டுமப்பால், ஈனாம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப் பினியசொற் சமைய வேண்டும், அழுத்தமிகு குறளினுக் கொப்பாக வேபொரு ளடக்கமுமிருக்கவேண்டும், அன்பான பாவின மிசைந்துவரல் வேண்டுமுனலங்கார முற்ற துறை

யில், பழுத்துள முவந்தோசை யுற்றுவரல் வேண்டும்படிக்குமிசை கூடல் வேண்டும், பாங்காக வின்னவை பொருந்திடச் சொற்கவிதை பாடிற் சிறப்பென் பர்காண், மழுத்தினைஞ் செங்கைதனில் வைத்தகங் காளனருண் மைந்தனென வந்த முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (அகூ)

விபூதி தரிக்கு முறைமை,

பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப் பரிந்துகை யாலெடுத்துப், பாரினில் விழாதபடி யண்ணாந்து செவியொடு பருத்தபுய மீதிலொழுக, நித்தமு விரல்களானெற்றியி னழுந்தலுற நினைவாய்த் தரிப்பவர்க்கு, நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமா நீங்காம நிமலனங்கே சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே தாண்டவஞ் செய்யுந்திரு, சஞ்சலம் வராதுபர கதியுதவு மிவரையே சத்தியஞ் சிவனென் னலாம், மத்தினிய மேருவென வைத்தமுதி னைக்கடையு மான்மருகனை முருகா, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (அஎ)

விபூதி வாங்கு முறைமை.

பரிதனி லிருந்துமியல் சிவிகையி லிருந்துமுயர் பலகையி லிருந்து மிகவே, பாங்கான வம்பலந் தனிலே யிருந்தும் பருத்ததிண்

ணையிலிருந்துந், தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேனின்று திருநீறு வாங்கியிடினுஞ், செங்கையொன் றாலும்விரன் மூன்றாலும் வாங்கினுந் திகழ்தம் பலத்தினோடும், அரியதொரு பாதையி னடக்கின்ற போதிலு மசுத்தனில மானவதிலும், அங்கே தரிக்கிலுந் தந்திடிற் றள்ளினு மவர்க்கு நரகென்பர்கண்டாய், வரிவிழிமடந்தைகுற வள்ளிநா யகிதனை மணந்துமகிழ் சகநாதனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (அஅ)

இவ்வுறுப்பாற் பயனிலையெனல்.

தேவா லயஞ்சுற்றி டாதகா லென்னகால் தெரிசியாக் கண்ணென் னகண், தினமுமே நின்கமல பாதத்தை நினையாத சிந்தைதானென்ன சிந்தை, மேவா கமஞ்சிவ புராணமவை கேளாமல் விட்டசெவி யென்ன செவிகண், விமலனை வணங்காத சென்னியென் சென்னிபணி விடைசெயாக்கையென் னகை, நாவார நினையேத்தி டாதவா யென்னவாய் நற்றீர்த்த மூழ்கா வுடல், நானிலத் தென்ன வுடல் பாவியா கியசனன நண்ணினுற் பலனேதுகாண், மாவாகி வேலைதனில் வருசூரன் மார்புருவ வடிவேலை விட்ட முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (அகூ)

நற்பொருளோடு தீப்பொருள் பிறத்தல்.

கோகனக மங்கையுடன் மூத்தவள் பிறந்தென்ன குலவுமாட் டின்க ணதர்தான், கூடப் பிறந்தென்ன தண்ணீரி னுடனே கொடும்பாசி யுற்று மென்ன, மாகருணு மமுதினெடு நஞ்சம் பிறந்தென்ன வல்லிரும் பிற்று ருத்தான், வந்தே பிறந்தென்ன நெடுமரந் தனின்மொக்குள் வளமொடு பிறந்தென் னவுண், பாகமிகு சென்னலொடு பதர்தான் பிறந்தென்ன பன்னுமொரு தாய்வயிற்றிற், பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன பலனேது மில்லை யன்ருே, மாகனக மேருவைச் சிலையென வளைத்தசிவன் மைந்தனென வந்த முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௬௰)

தன்னினத்தா லழிவு.

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க் கூரிரும் புகளை வெல்லும், கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன் கோத்திரமெலாம ழிக்கும், நலமான பார்வைசேர் குருவியா னதுவந்து நண்ணுபர வைகளை மாய்க்கும், நட்புடன் வளர்ந்தகலை மானென்று சென்றுதன் னவில்சாதி தனையி ழுக்கும், உலவுநற் குடிதனிற் கோளர்க ளிருந்துகொண் டொற்ருமை யிட ழிப்பார், உளவனில் லாமனூ ரழியா தெனச்சொல்லு முலகமொழி நிசமல்

லவோ, வலமாக வந்தர ணிடத்தினிற் கனி கொண்ட மதயானை தன்சோ தரா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. (கூக)

வீணுக் குழைத்தல்.

குயின்முட்டை தனதென்று காக்கையடை காக்குங் குணம்போலு மீக்க ளெல்லாங், கூடியே தாமுண்ண வேண்டுமென்றேதினங் கூடுய்த்த நறவு போலும், பயில்சோரருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற பாலனென் றுட்க ருதியே, பாராட்டி முத்தமிட் டன்பாய் வளர்த்திடும் பண்பிலாப் புருஷர்போலும், துயிலின்றி நிதிகளைத் தேடியே யொருவர்பாற் றெட்டுத் தெறித்தி டாமல், தொகை பண்ணி வைத்திடுவர் கைக்கொண்டு போக வரு சொந்தமா னவர்வே றுகாண், வயிரமொடு சூரனைச் சங்கார மேசெய்து வானவர்க் குதவு தலைவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே. (கூஉ)

இது சேரி னிது பயன்படாதெனல்.

அழலுக்கு ளேவிட்ட நெய்யும் பெருக்கான வாற்றிற் கரைத்த புளியும், அரிதான கமரிற் கவிழ்த்திட்ட பாலும் வருமலகைகட் கிடுபூசையும், சுழல்பெருங் காற்றினில் வெடித்தபஞ் சும்மணற் சொரிநறும் பனிநீருநீள்,

சொல்லரிய காட்டுக் கெறித்தநில வுங்கடல் சு
ழிக்குளே விடுகப் பலும், விழலுக் கிறைத்தி
ட்ட தண்ணீரு மிகமாய வேசைக் களித்த பொ
ருளும், வீணருக் கேசெய்த நன்றியும் பலனி
ல்லை விருதாவி தென்பர் கண்டாய், மழலைப்
பசுங்கிள்ளை முன்கைமலை மங்கைதரு வண்
ணக் குழந்தை முருகா, மயிலேறி விளையாடு
குகனேபுல் வயனீடு மலைமேவு குமரே சனே.

கைவிடத் தகாதவர்.

அன்னைசுற் றங்களையு மற்றைநாண் மு
தலா வடுத்துவரு பழையோ ரையும், அடுப
கைவ ரிற்றப்பி வந்தவொருவேந்தனையு மன்
பான பெரியோ ரையும், தன்னைநம் பினவரை
யு மேழையா னவரையுஞ் சார்ந்தமறை யோ
ர்தம் மையும், தருணமிது வென்றுநல் லாபத்
து வேளையிற் சரணம் புகுந்தோ ரையும், ந
ன்னயமதாகமுன் னுதவிசெய் தோரையு நா
ளுந் தனக் குறுதியாய், நத்துசே வகரையுங்
காப்பதல் லாதுகை நழுவவிட லாகாதுகாண்,
மன்னயி மினியசெஞ் சேவலுஞ் செங்கைம
லர் வைத்தசர வணபூ பனே, மயிலேறி வி
ளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு கும
ரே சனே. (கூச)

தகாத செயல்.

அண்டிவரு முற்றூர் பசித்தங் கிருக்க
வே யன்னியர்க் குதவு வோரும், ஆசுதபு பெ

ரியோர்செய் நேசத்தை விட்டுப்பி னற்பனா யடுத்த பேரும், கொண்டவொரு மனையா ளிருக்கப் பரத்தையைக் கொண்டாடி மருவு வோரும், கூறுசற் பாத்திர மிருக்கமிகு தான மது குணமிலார்க் கீந்த பேரும், கண்டுவரு புதியோரை நம்பியே பழையரைக் கைவிட் டிருந்த பேரும், கரிவாலை விட்டுநரி வால்பற் றி நதிநீர் கடக்கின்ற மரியாதைகாண், வண் டடர் கடப்பமலர் மாலிகா பரணமணி மார்ப னே யருளா ளனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவுகுமரே சனே. ()

நல்லோர் முறை.

கூடியே சோதரர்கள் வாழ்தலா லுந்த கு குழந்தைபல பெறுத லாலும், குணமாக வேபிச்சை யிட்டுண்கை யாலுங் கொடும்பிதி ர்க் கிடுத லாலும், தேடியே தெய்வங்க ளுக்கீ த லாலுந் தியாகங் கொடுத்த லாலும், சிறி யோர்கள் செய்திடும் பிழையைப் பொறுத் துச் சினத்தைத் தவிர்த்த லாலும், நாடியே தாழ்வாய் வணங்கிடுத லாலுமிக நல்வார்த் தை சொல்ல லாலும், நன்மையே தருமலாற் றூழ்ச்சிகள் வராவிவை நல்லோர்கள் செயுமு றைமைகாண், வாடிமன நொந்துதமிழ் சொ ன்னநக் கீரன்முன் வந்துதவிசெய்த முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு ம லைமேவு குமரே சனே. (கூகூ)

அடைக்கலங் காத்தல்.

அஞ்சலெனு நாயினுடல் தருமன் சுமந்துமுன் ஜற்றைக் கடத்துவித்தான், அடைக்கல மெனுங்கயற் காகநெடு மாலுட னருச்சுனன் சமர்புரிந்தான், தஞ்சமென வந்திடுபுறுவுக்கு முன்சிபி சரீரந் தனைக்கொடுத்தான், தடமலைச் சிறகரிந் தவனைமுன் காக்கத் ததீசிமுது கென்பளித்தான், இன்சொலுடனேபூத தயவுடைய ராயினேரொருவருக்கு மாபத்திலே, இனியதஞ்சிவனை விடுத்தாகிலுங்காத் திரங்கிரட் சிப்பரன்றோ, வஞ்சகிர வுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன் வளர்சூர னுடலீண்டவா, மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. (கூஎ)

யோக்கியா யோக்கியம்.

பாலினொடு தேன்வந்து சேரில்ருசி யதிகமாம் பருகிநீர் சேரி லென்னும், பவளத்தினிடைமுத்தை வைத்திடிற் சோபிதம் படிகமணி கோர்க்கி லென்னும், மேலினிய மன்னர்பால் யானைசேர் வதுகனதை மேஷமது சேரி லென்னும், மிக்கான தங்கத்தி னவமணியுறிற்பெருமை வெண்கல் லழுத்தி லென்னும், வாலிப மினோர்களுட னிளையோர்கள் சேரினலம் வளைகிழவர் சேரி லென்னும், மருவுநல் லோரிடம் பெரியோர் வரிற்பிரியம் வருகய

வர் சேரிலென்னும், மாலிகை தரித்தமணி மார்பனே மானீன்ற வள்ளிக்கு வாய்த்த கணவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கூஅ)

பெரியோரியல்பு.

அன்னதானஞ்செய்தல்பெரியோர்சொல் வழிநிற்ற லாபத்தின் வந்த பேருக், கபயங்கொடுத்திடுத னல்லினஞ் சேர்ந்திடுத லாசிரியன் வழிநின் றவன், சொன்னமொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை துணையடி யருச்சனைசெயல், சோம்பலில் லாமலுயிர்போகினும் வாய்மைமொழி தொல்புவியி னாட்டியிடுதல், மன்னரைச் சேர்ந்தொழுகல் கற்புடைய மனைவியொடு வைகினுந் தாமரையிலை, மருவுநீ ரெனவுறுத லிவையெலா மேலவர்த மாண்பென் றுரைப்ப ரன்றோ, வன்னமயின் மேலிவர்ந் திவ்வுலகை யொருநொடியில் வலமாக வந்த முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கூகூ)

நூற் பயன்.

வன்னமயி லேறிவரு வேலாயு தக்கடவுண் மலைமே லுகந்த முருகன், வள்ளிக்கொ

டிக்கினிய வேங்கைமர மாகினேன் வானவ
ர்கள் சேனுபதி, கன்னன்மொழி யுமையா டி
ருப்புதல்வ னரன்மகன் கங்கைபெற் றருள்
புத்திரன், கணபதிக் கிளையவொரு மெய்ஞ்
ஞான தேசிகக் கடவுளா யினன்குடியினன்,
பன்னரிய புல்வயலில் வாலகும ரேசர்மேற்
பரிந்துகுரு பாத தாசன், பாங்கான தமிழாசி
ரியவிருத் தத்தினிற் பாடவொரு நூறுநாடி,
நன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர் நா
டொறுங் கற்ற பேர்கள், ஞானயோ கப்பெ
றுவர் பதவியா வும்பெறுவர் நன்முத்தி யும்
பெறுவரே. (௱)

குமரேசசதகம் முற்றிற்று.

வைகுந்த அம்மானை.

பரிசித்துவுக்கு கலியாணஞ் செய்கிறது.

சிந்தைமகிழ்ந்து சிறுவன்மேலன்புவைத்து
தந்தையர்கள்தாமுந் தமரிலுள்ளமன்னர்களும்
கன்னிக்கலியாணங் காசினியோர்தாமறிய
சீராகஐவர் சிறப்பாகப்பேரனுக்கு
நேராகநாள்முகூர்த்தம் நிட்சயதாம்பூலமிட
வேதியரைத்தானழைத்து வேண்டும்முகூர்த்தமிட
ஆதிநாராயணர்பால் ஐவரும்போய்ச்சென்றுகண்டு
சுந்தரிதன்மைந்தனுக்குச் சுபசோபனம்முடியத்
தந்திரமின்னதென்று சாற்றுவீரெம்பெருமாள்
அழகுதிருமேனியனே அபிமன்னன்மைந்தனுக்கு
களபமுகின்மேனியனே கல்யாணந்தான்முடிய
வகையேதும்பெண்தனக்கு மாயோனேசொல்லுமென்
துகைவகையும்ஐவருக்குத் தோற்றமுடனே நினைந்
நால்வகையும்பார்த்து நாராயணர்தாமும்
பால்போலும்வங்கிஷத்திற் பண்பானகோத்திரமு
இன்னபடியென்று இதமாகச்சம்மதித்து
சொன்னதொருமாயோனைத் தொழுதுமிகப்பணிந்து
சாத்தகியாழ்வார் தானீன்றமைந்தனெனும்
ஏற்றதுளசி மகராஜனீன்றெடுத்த
செல்வியெனும்பூமடந்தை சிறியாளைமாலையிட
நல்விசளமென்று நாரணரைப்பெண்கேட்க
நாடிநடந்தார்கள் நல்லதொருபஞ்சவர்கள்
தேடித்துவாரகா புரிதனிலேசென்றுபுக்கி
கண்டார்கள்மாயனையே கமலமலர்ப்பாதமதைத்
தெண்டனிட்டுவாய்புதைத்துச் செப்பினார்தன்மருசே
அந்தமொழிகேட்டு ஆமென்றுகோபாலர்
சந்தோஷமாகச் சாத்தகியைவாவெனவே